செ.வெ.எண்:-617 நாள்:-23.07.2010

# பத்திரிக்கைச் செய்தி

திரவ எரிவாயு (எரிபொருள்) (LPG (Distributors) விநியோகஸ்தர்கள் மற்றும் திரவ எரிவாயு விற்பனையாளர்கள் (LPG Suppliers) – ஆகியோர்கள் போக்குவரத்து ஆணையரிடம் தங்கள் நிறுவனங்களுக்கு திரவ எரிவாயு நிரப்ப வரும் வாகனங்களுக்கு சீராக விநியோகம் செய்ய இயலவில்லை எனவும் மேலும் திரவ எரிவாயு நிரப்பும் நிறுவனங்கள் மிகவும் குறைந்த கணக்கில் உள்ளதாகவும், திரவ எரிவாயு எடுத்து வரும் கனரக வாகனங்கள் சென்னை பெருநகருக்குள் வருவதற்கு பகலில் கால நிர்ணயம் வழங்கப்பட்டுள்ளதால் தங்களுக்கு காலதாமதம் ஏற்படுவதாகவும் குறிப்பிட்டு 16.7.2010 அன்று மனு சமர்ப்பித்துள்ளார்கள். எனவே திரவ எரிவாயு விநியோகஸ்தர்கள் மற்றும் திரவ எரிவாயு விற்பனையாளர்கள் ஆகியோர் கலந்துக் கொண்ட கூட்டத்தில் உரிய தீர்வு எடுக்கப்பட்டுள்ளது. இதன் மீது உரிய நடவடிக்கை எடுத்து, காவல் துறை அலுவலரிடம் திரவ எரிவாயு ஏற்றி வரும் வாகனங்களை சென்னை பெருநகரத்திற்குள் நுழைவதற்கான கால நிர்ணயத்தை விலக்கி பொது மக்களுக்கு தங்கு தடையின்றி விநியோகம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9